**ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன், 48 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும், ரூபா 591,709 ஆன வங்கி மேலதிகப் பற்று மிகுதி இருப்புத் தொகை மிகுதிக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேலதிகப் பற்று மிகுதி நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. 53 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படுகின்ற அனைத்து புள்ளிவிபரத் தகவல்களுக்கும் ஒப்பீட்டு தகவல் வெளியிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றில் பணம் மற்றும் வங்கி மிகுதிகளின் பொழிப்பொன்று மட்டுமே காட்டப்பட்டிருந்ததுடன் பணம் மற்றும் வங்கி மிகுதியின் விரிவான அறிக்கை குறிப்பு இலக்கம் 06 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட நடைமுறை கணக்கின் மிகுதி ரூபா 591,709 ஆன மேலதிகப் பற்று ஒன்றாக காட்டப்பட்டுள்ளது. உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையத்தினால் 1998 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தன தகவல் நிலையம் எனும் பெயரிலான தனியார் கம்பனியில் ரூபா 5,000,000 ஆன முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அக்கம்பனி 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்டமையால் முதலீடுகளில் ரூபா 700,000 மட்டுமே மீண்டும் பெறப்பட்டிருந்தது. நிறுவனம் மூடப்பட்டு 12 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், பெற்றுக்-கொள்ளப்படாத மிகுதி ரூபா 4,300,000 முதலீட்டு மிகுதி தொடர்ந்தும் நிதிக் | நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜயவர்த்தன தகவல் நிலையம் 2008 ஆம் ஆண்டில் நட்டமேற்பட்டதனால் மூடப்பட்டது. இதனால் குறிப்பிட்ட நிறுவனத்தில் இத்தொகை அல்லது அதற்கு உரித்தான இலாபப் பங்கைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 4,300,000 ஆன | முதலீட்டு மிகுதி நட்டமொன்றாக கணக்குகளில் சீராக்கப்படுவதற்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும். நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் நீண்டகால முதலீடுகளாக காட்டப்பட்டிருந்தது. பெற்றுக் கொள்ளப்படாத இம்முதலீட்டு மிகுதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | தொகையை நீக்குவதற்காக 2015 திசெம்பர் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட நிர்வாக சபைக் கூட்டத்தில் நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட முதலீட்டுத் தொகை கணக்குகளில் நீக்குவதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் பொதுத்திறைசேரியினால் புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நிலைய அருங்காட்சியகத்தின் பண்டைய மதிப்புள்ள பரம்பரைச் சொத்துக்கள் தொடர்பாக வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. 21 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 481,346 ஆன திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருந்த துடன் இக்காரணத்தால் வருடாந்த இலாபம் மற்றும் நிலையான சொத்துக்களின் தேறிய மதிப்பு ரூபா 430,412 ஆலும், 2020 திசெம்பர் 31 இல் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 50,934 ஆலும் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் 50 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் தனித்தனியாக கணக்குகளில் எடுக்கப்படாது காணிகள் உட்பட கட்டிடங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் அதாவது ரூபா 1,731,644 | பரம்பரைச் சொத்துக்கள் தொடர்பாக அருங்காட்சியகத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அறிவுறுத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்காணப்பட்ட கொள்கையின் பிரகாரம் கட்டிடம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு பகுதியை மாற்றுவதற்காகத் செலவிடப்பட்ட செலவுகள் என்பதுடன் அதனால் குறிப்பிட்ட கிரயம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அடையாளம் காணும் அளவு கோல்கள் திருப்தியாக இருந்தமையால் குறிப்பிட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. நிலையம் | நியமத்தின் விதிகளுக்கு இணங்க பரம்பரைச் சொத்துக்கள் தொடர்பாக வெளிக்காட்டப்படல், செலவுகள் மற்றும் சொத்துக்கள் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருந்தது. | ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் தனித்தனியாக மதிப்பிடப்பட்டிருக்க வில்லை. மதிப்பீட்டாளர் திணைக்களத்தினால 2015 ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை பெறப்பட்டு 2021 ஆம் ஆண்டிலிருந்து காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக குறிப்பிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் கிரயம் ரூபா 20,120,653 ஆன முழுமையாகத் தேய்விடப்பட்டு ஆனால் தொடர்ந்தும் பயன்பாட்டிற்குட்படுத்தப் படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் கட்டிடம் பொறி மற்றும் உபகரணங்களை மறு மதிப்பீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 நீடிப்புக் காரணமாக 2020 ஆம் ஆண்டில் நீண்டகாலமாக பயணக் கட்டுப்பாடுகள் விதித்தமையால் நியைான சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | நியமத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய கைகெட்டக் கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த மதிப்பிற்கு அளவிட வேண்டிய போதிலும் ரூபா 4,280,329 ஆன விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள புத்தக இருப்பு விற்பனை விலையில் காட்டப்பட்டிருந்தமையால் பற்றாக்குறை அதிகமாகக் காட்டப்பட்டிருந்ததுடன் 47(அ) பிரிவின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புத்தக இருப்பு பெறுமதி கிரயம் அல்லது தேறிய கைகெட்டக்கூடிய பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அளவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்ட பின்னர் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு இலக்கம் 09 இன் 38 தொடக்கம் 42 வரையான பந்திகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 657,775 ஆன விற்பனை விலையில் காட்டப்பட்டிருந்த 1914 சேதமடைந்த புத்தகங்கள் 38 தொடக்கம் 42 வரையான பிரிவுகளின் பிரகாரம் தேறிய கைக்கெட்டக்கூடிய பெறுமதிக்கு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் வரவு செலவுத் திட்டத்தின் பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையிலான ஒப்பீடு மற்றும் அப்பெறுமதிக்கிடையேயான கணிசமான வேறுபாடுகளுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவு திட்டத்தின் பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பவற்றுக்கிடையே ஒப்பீடொன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடை பங்களிப்புக்கான பிற்கால ஊழியர் பலன்கள் தொடர்பான திட்டங்கள் தொடர்பாக செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்தல் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. நடைமுறை பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டிய ரூபா 4,952,653 ஆனது 2020 திசெம்பர் 31 இல் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கங்கள் நடைமுறைப் பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் நலன்களின் கீழ் நிலையம் பணிக்கொடைக் கொடுப்பனவுகளாகச் செலுத்துவதுடன் அது தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பணிக்கொடை ஒதுக்கங்களின் பெறுமதி தவறுதலாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நியமத்தின் விதிகளுக்கு இணங்க செயற்பட்டு வெளிப்படுத்தல் களைச் செய்வதற்கு மற்றும் பணிக்கொடை சரியான முறையில் கணக்குகளில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகப்பெறுமதி ரூபா 4,484,303 ஆன திறைசேரி உண்டியல்களில் ரூபா 4,202,720 ஆன முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட முதலீட்டின் பெறுமானம் ரூபா 281,583 ஆல் குறைவாகவும், ரூபா 33,567,187 ஆன நிலையான வைப்புக்களின் மதிப்பு ரூபா 37,118,596 ஆக ரூபா 3,551,408 ஆல் அதிகமாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. திறைசேரி உண்டியல்களுக்கான மீளாய்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் முன்னர் பெறப்பட்டிருந்த வட்டி வருமானங்கள் முறையே ரூபா 189,527 மற்றும் ரூபா 92,056 என்பதுடன் அவை இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறுங்கால முதலீடுகளில் திறைசேரி உண்டியல்களின் முகப் பெறுமதியான ரூபா 4,484,303 உள்ளடக்கப்படாததுடன் அதன் உண்மைப் பெறுமதி ரூபா 4,202,720 உள்ளடக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களின் மிகுதிகளை கணக்காய்விற்கு உறுதிப்படுத்துவதற்கான பதிவேடுகளை நேரடியாக வழங்குமாறு வங்கிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் வட்டி வருமானக் கணக்கில் திறைசேரி உண்டியல்களின் வட்டியாக ரூபா 281,583 குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்கு வட்டி வருமானம் ரூபா 189,527 முன்னர் பெறப்பட்ட வருமானத்துடன் வட்டி வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. எதிரில் வட்டி வருமானம் மற்றும் முன்னர் பெறப்பட்ட வட்டி வருமானம் தனித்தனியாக குறிப்பிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சரியான பெறுமதி சரியான முறையில் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருடத்தின் கட்டிடம் பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு செய்த பெறுமதி ரூபா 201,500 ஆல் குறைவாகக் காட்டப்பட்டமையால் முதலீடுகள் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட காசுப் | நிதியல்லாச் சொத்துக்களின் மாற்றங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படுவது வருடத்தின் தேறிய தேய்மானத்தின் அளவாகும். அதாவது 2020 ஆம் ஆண்டின் | சரியான பெறுமதி சரியான முறையில் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வின் ரூபா 4,376,019 ஐ 2020 ஆம் வருடத்தின் பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திலிருந்து நீக்கப்பட்ட ரூபா 201,500 ஆன பெறுமதி குறைக்கப்பட்டதால் ஆகும். காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரிப்பின் கீழ் காட்டப்பட்டிருப்பது நடைமுறைச் சொத்தொன்றான சில்லறைக்காசில் வருடத்திற்குள் ஏற்பட்ட முரண்கள் ஆகும். அது 2021/12/31 இல் உள்ள சில்லறைக் காசு மிகுதியல்ல என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

## 1.5.4 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 26,625,494 ஆன 12 மாத நிலையான வைப்புக்களின் வட்டித் தொகை ஒவ்வொரு வருடத்திலும் ஆரம்பத் தொகைக்கு சேர்க்கப்பட்டு மீண்டும் முதலீடு செய்யப்படுவதற்கு நிலையம் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும், 2020 ஏப்ரல் 01 வரையில் வருடமொன்றுக்கான வட்டி வருமானம் ரூபா 2,928,804 ஆனது நிர்வாக சபையின் அனுமதியின்றி மீண்டும் பெறப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் வருமானம் குறைவடைந்தமையால் 2020 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவுகள் தீர்க்கப்படுவதற்காக போதியளவு பணம் காணப்படாமையால் நிலையான வைப்பு வட்டிப் பணம் பெறப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிர்வாக சபைக் கூட்டத்தில் இதற்குத் தேவையான மேவுகை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடுகள் மீண்டும் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கிரயம் ரூபா 201,500 ஆன நிலையான சொத்துக்கள் புத்தகங்களில் | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் புத்தகங்களில் | நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| நீக்கப்படுவதற்கு பொருட் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரை மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நீக்கப்படும் போது பொருட் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரைக்காக நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் செய்யப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிலையான சொத்துக்கள் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ரூபா 117,839,906 கிரயமான 17 வகையான நிலையான சொத்துக்களுக்கான விரிவான அட்டவணைகள் மற்றும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 82,500 ஆன மீளப் பெறத்தக்க வைப்புத் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்படாமையால் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் கிரயம் தொடர்பான விரிவான பதிவேடு சமர்ப்பிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. வைப்புத் தொகை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட தகவல்கள் விசாரிக்கப்பட்டுத் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள், பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| கட்டிட வாடகை வருமானம் முறையாக மாதாந்தம் அறவிடப்படுவதற்கான முறைமையொன்று மற்றும் தீவிர முயற்சிகள் எடுக்கப்படாத காரணத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான கட்டிட வாடகை வருமானம் ரூபா 17,737,363 ஆக இருந்ததுடன் அதில் 08 குத்தகை தாரர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 4,247,259 அறவிடப்பட்டிருக்கவில்லை. 2013-2019 காலப்பகுதிக்கான பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 5,664,347 ஐ அறவிடுவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன் இதில் இற்றை வரையில் வாடகை அடிப்படையில் நீக்கப்பட்ட 05 நிறுவனங்களிடமிருந்து ரூபா 4,093,380 அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய கட்டிட வருமானம் தற்போது பெறப்பட்டுள்ளது. 2013 தொடக்கம் 2019 வரைக்கான வாடகை வருமானத் தொகையினை அறவிடுவதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பணக் கொடுப்பனவு செய்யப்படாத பட்சத்தில் 2022 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2014 ஆம் ஆண்டில் C.I.F.L நிறுவனம் முறிவடைந்தமையால் இலங்கை மத்திய வங்கியால் மூடப்பட்டு விட்டது. அதற்கான பெற வேண்டிய ரூபா 1,887,195 ஆனது அறவிடப்பட முடியாமையால் எதிர்காலத்தில் திறைசேரியின் அனுமதியின் கீழ் கணக்குகளில் பதிவழிக்கப்படுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. | குறிப்பிட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (1)2 மற்றும் 102 ஆம் பிரிவு | நிலையம் வருமான வரிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கோ அல்லது வரி விடுவிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2018/2019 மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான வருமான வரி கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையம் இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் செயற்படாதமையால் ஆரம்பத்திலிருந்து வருமான வரி செலுத்தவில்லை. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1970 இன் 16 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 15 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்தின் மாதாந்தப் பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2000 ஆம் ஆண்டிற்கான பங்களிப்புப் பணம் ரூபா 249,119 மற்றும் 2020 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான பங்களிப்புப் பணம் ரூபா 370,747 ஆனது 2020 திசெம்பர் 31 வரையில் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் தாக்கத்தினால் 2020 ஆம் ஆண்டின் நிலையத்தின் செயற்பாட்டு வருமானம் குறைவடைந்தமையால் வருடத்தின் இறுதிக் காலாண்டின் செலவுகள் தீர்க்கப்படுவதற்கு தாமதமாகி இருந்தது. அதனால் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்தப் பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2020 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் குறிப்பிட்ட பங்களிப்புப் | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் தாக்கத்தினால் 2020 ஆம் ஆண்டின் நிலையத்தின் செயற்பாட்டு வருமானம் குறைவடைந்தமையால் வருடத்தின் இறுதிக் காலாண்டின் செலவுகள் | ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணம் ரூபா 55,612 ஆனது 2020 திசெம்பர் 31 வரையில் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படுவதற்கு தாமதமாகி இருந்தது. அதனால் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவு | நிலையம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராத துடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை | புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அமைச்சின் உள்ளக கண்ககாய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்திற்கான உள்ளக கணக்காய்வு உதவியாளர் பதவியொன்று உருவாக்கப்பட்டு அதற்காக உரிய ஆட்சேர்த்தல் பணிகள் மேற்கொள்ள குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது.<br><br>எதிர்காலத்தில் நிலையத்திற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றினை தாபிப்பதற்கு குறித்துக் வைத்துக் கொள்ளப்பட்டது. | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137, 139, 138 மற்றும் 245 | ரூபா 1,009,707 பெறுமதியான 12 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் அங்கீகாரமின்றியும் ரூபா 1,965,250 பெறுமதியான 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுப்படுத்தப்படாமலும் ரூபா 694,156 பெறுமதியான 15 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 138, 139 மற்றும் 242 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை செலுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரித்தலும் சான்றுப்படுத்தலும் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 272 | ரூபா 56,242 பெறுமதியான 06 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 1978 இன் திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிகள் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடொன்றினை தயாரிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (எ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள் மற்றும் பெறுகைகள் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெறுகைகள் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் 2021 ஆம் ஆண்டு முதல் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி நாளொன்றுக்கு ரூபா 5,000 படி செலுத்தும் அடிப்படையில் வாசிகசாலையின் பணிகள் தொடர்பில் மதியுரையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நியமனம் 45 நாட்களை விஞ்சலாகாத போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக குறித்த | மதியுரைக் கட்டணங்களுக்காககட்டு ப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள குறித்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வாசிகசாலை மற்றும் தொல்பொருளியல் தொடர்பான | சுற்றறிக்கை விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதியுரையாளரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த துடன் 2020 ஆம் ஆண்டின் போது மாதமொன்றிற்கு ரூபா 30,000 படியாக 05 மாதங்களுக்கு ரூபா 150,000 செலுத்தப்பட்டிருந்தது. | பிரபல்யமிக்க பேராசிரியரான கே.ரீ.பரணவிதான அவர்களின் சேவை நிலையத்தின் வாசிகசாலை மற்றும் நூதனசாலையின் மேம்படுத்தல் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு பதிலாக அவரின் சேவை நீண்டகாலமாக பெற்றுக் கொள்ளப்பட்டது. | |
| (ஐ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை 5.2.1 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டிற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் பெறப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று பாதிடப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று ஆகியன சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 செப்தெம்பர் 01 முதல் 2021 பெப்ரவரி 28 வரையான காலப் பகுதியினுள் கட்டுப்பாட்டுச் சபை கூட்டமொன்றை நடாத்துவதற்கு முடியாதிருந்ததனால் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுச் சபையும் அங்கீகாரத்துடன் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| | 4.2.6 ஆம் பிரிவு | காலாண்டு ரீதியான, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு | 2020 ஆம் ஆண்டிற்கான காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் குறித்த | சுற்றறிக்கை விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிக்கைகள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | |
| | 6.5.1 ஆம் பிரிவு | நிதி அறிக்கைகள் 2021 ஏப்ரல் 08 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக நாட்டினுள் விதிக்கப்பட்டிருந்த போக்குவரத்து தடைகள் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டமையால் உரியதிகதியில் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் கடினமானதாக இருந்தது. உரிய திகதியில் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய PED/03/2019 ஆம் இலக்க 2020 திசெம்பர் 18 ஆந் திகதிய PED/03/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 12 ஆம் இலக்க அரச முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 6.5 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிராத போது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 781,750 தொகை இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த ஊக்குவிப்பு படிகளுக்கான கொடுப்பனவானது நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட PED/03/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகும். எதிர்காலத்தில் ஊக்குவிப்பு படிகளை செலுத்தும் போது 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 12 கொண்ட பொது முயற்சிகளுக்கான நல்லாளுகைக்கான வழிகாட்டல் கோவையின் 6.5 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஓ) | 2020 யூன் 10 ஆந் திகதிய 07/2020(III) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி 2020 யூன், யூலை மற்றும் திசெம்பர் மாதங்களில் இடர்கடன் தவணைகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக அறவிட வேண்டிய இடர் கடன் தவணைப் பணம் ரூபா 141,852 இனால் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | நாட்டினுள் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் ஊழியர்களின் பொருளாதார நலனினை ஏற்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள கடனுக்காக 2020 ஆம் ஆண்டின் யூன், யூலை மற்றும் திசெம்பர் மாதங்களின் போது தவணைப் பணம் குறைத்துக் கொள்ளப்படாதிருந்த துடன் எதிர்காலத்தில் கடன் தவணைப் பணத்தினை அறவிடும் போது பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஔ) | 2015 மார்ச் 26 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | i. விழா முற்பணமாக ரூபா 10,000 இற்கு பதிலாக 19 ஊழியர்களுக்கு ரூபா 30,000 படி ரூபா 570,000 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. | 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆகிய வருடங்களின் விழா முற்பணமாக ஒரு ஊழியருக்கு ரூபா 30,000 படி வழங்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் 2015 மார்ச் 26 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விழா முற்பணங்களை செலுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. அதன் மூலம் நிலையத்தினால் வருடாந்தம் மீண்டெழும் செலவினங்கள் அல்லது மூலதன செலவினங்களுக்காக திறைசேரியிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்படாமையால் விழா முற்பணங்களை செலுத்துவதற்கு | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | |
| ii. | விழா முற்பணங்களுக்கு சமனான 08 தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,000 படி 10 தவணைகளில் அந்த முற்பணம் அறவிடப்பட்டிருந்த துடன் இதன் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 226,818 ஆன தொகையினை அறவிடப்படாத மீதியாக காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் ஊழியர்களுக்கு பொருளாதார நிவாரணமொன்றை வழங்கும் நோக்கில் கடன் வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டின் யூன், யூலை மற்றும் திசெம்பர் மாதங்களின் தவணைப் பணம் கழிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் கடன் தவணைப் பணத்தை அறவிடும் போது பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்குரிய தவணைப் பணம் தற்போது செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு தற்போது நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றுள்ள ஊழியர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 5,007,114 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 9,110,636 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபெறுகளில் ரூபா 14,117,750 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்குரிய சம்பளம் மற்றும் வேதனங்களின் செலவினம் ரூபா 1,982,244 இனால் குறைவடைந்த போதிலும் கட்டிட வாடகை வருமானமும் ரூபா 15,963,206 இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டின் போது தனியார் வங்கியொன்றில் ரூபா 9,725,000 ஆன தொகை நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வங்கி நட்டமடைந்த காரணத்தால் திறைசேரியினால் வைப்பாளர்களின் பொறுப்பு இலங்கை சேமிப்பு வங்கியின் ஊடாக தீர்ப்பதற்கு உத்தேச முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த தொகையை 5 சதவீத வருடாந்த வட்டியின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது மீளப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு நாணயக் கடிதமாக வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் முதல் 02 வருட காலத்திற்காக குறித்த வங்கி இணங்கியவாறு வட்டி செலுத்தாத காரணத்தால் நிலையத்திற்கு ரூபா 972,500 ஆன வட்டித் தொகை இழக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 03 ஆந் திகதி இந்த கடன் முறி முதிர்வடைந்திருந்த போதிலும் ஆரம்பத் தொகை மற்றும் 09 வருட வட்டித் தொகையான ரூபா 14,101,250 தொகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கடன் முறி வைப்புகளுக்கு உரிய நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு | நிலையத்தினால் 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 9,725,000 ஆன தொகை இலங்கையின் முன்னணி வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் வங்கி நட்டமடைந்தமையால் இலங்கை மத்திய வங்கியின் கட்டளையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் திசெம்பர் 03 ஆந் திகதி முதல் 10 வருடங்களுக்கு இலங்கை சேமிப்பு வங்கியின் கடன் முறியினுள் முதலீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 2007-2008 ஆண்டிற்கான குறித்த கடன் முறி வட்டி செலுத்தப்படாது என வங்கியினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 09 வருடங்களுக்கு உரிய வட்டி வருமானம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சபை பத்திரமொன்று குறித்த கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் அறிக்கை இலங்கை சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட வேண்டியதுடன் 2017/12/03 ஆந் திகதி முதல் கட்டுப்பாட்டு சபை கூட்டமொன்றினை ஏற்பாடு செய்ய முடியாதிருந்தமையால் இந்த முதலீட:டுத் தொகை மற்றும் வட்டி | முதிர்வடைந்துள்ள கடன் முறிகள் 09 வருட காலத்திற்கு உரிய வட்டித் தொகை ஆகியவற்றை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தொகையினை மீளப் பெற்று மீள முதலீடு செய்ய முடியாதிருந்தது. எதிர்காலத்தில் கட்டுப்படாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பின்னர் பணத்தை மீளப் பெற்று மீண்டும் முதலீடு செய்வதற்கு உரிய பணிகளை ஒழுங்கமைப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | நிலையத்தினால் வெளிவாரித் தரப்பினரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 7,175 முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 184,589 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது பெறுமதி சேர் வரி ரூபா 1,955,488 குறித்த தரப்பினருக்கு மீள செலுத்தப்படாது 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரி குறித்த பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோரிடமிருந்து அறவிடப்பட்டதன் பின்னர் அந்தத் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்குமுனனர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பெறுமதி சேர் வரியிலிருந்து ஜே.ஆர்.ஜயவர்த்தன மத்திய நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த வரித் தொகை தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | குறித்த வரியை உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது 6 நிறுவனங்களுடன் வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராத துடன் 3 நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த வளாகங்களில் | 6 நிறுவனங்களுடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. 3 நிறுவனங்களுடன் 2021 ஆம் ஆண்டு முதல் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br><br>நிலையத்தின் | கட்டிடங்களில் தற்போதைய சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கும் உடன்படிக்கைகளை பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| வாடகை மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்று கூறுவிலைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் சதுர அடியொன்றுக்கு ரூபா 115 முதல் ரூபா 165 எனும் மிகவும் குறைந்த விலைகளின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | கட்டிடங்கள் அமைந்துள்ள வளாகத்திற்காக வருடாந்தம் பாரிய கேள்வியொன்று நிலவுவதில்லை. கட்டங்கள் வாடகைக்கு வழங்கப்படுதல் நிறுவனத்தினால் நீண்ட காலம் நிலைத்திருக்கும் இயலுமையை கருத்தில் கொள்ளுதல் மற்றும் அரச அமைச்சின் கீழ் உள்ள செயற்திட்டங்கள் நிறைவடையும் வரை தங்கியிருக்கும் அடிப்படையில் கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றமையால் வருடாந்த பெறுகைகள் மேற்கொள்ளும் போது நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

---

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| நிலையத்தின் கூரைத் தகடினை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,189,050 ஆன ஒப்பந்தத்திற்கு உரிய முதல் இடைக்கொடுப்பனவாக 2020 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 382,960 ஆன பட்டியல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. வேலைத்தளத்தில் காணப்பட்ட இருப்பு மாத்திரம் என்பதுடன் குறித்த இருப்புக்களின் சரியான தன்மை பொறியியலாளர் ஒருவரினால் சான்றுப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக ஒப்பந்ததாரரின் கணக்கிற்கு ரூபா 689,639 நேரடியாக மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 344,975 செலுத்துவதற்கு உரிய எதுவித ஆவணமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையத்தின் உட்கூரையினை பழுதுபார்த்தலுக்காக ஆரம்ப கொடுப்பனவாக ரூபா 382,960 செலுத்தப்பட்டது பெறுகைகள் வழிகாட்டிக்கோவையின் 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் 30 சதவீத முற்பண தொகையொன்றினை செலுத்தும் இயலுமையின் அடிப்படையிலாகும். இந்த கொடுப்பனவுகளை செலுத்தும் சந்தர்ப்பத்தில் இந்த பெறுகையின் 20 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் இடம்பெற்றிருந்தது. 2020 ஒக்தோபர் மாதம் 16 ஆந் திகதியளவில் கொவிட் 19 | பொறியியலாளர் ஒருவரின் சான்றுப்படுத் தலின் அடிப்படையில் கொடுப்பனவு பணிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொற்றுநோய் பரவியமையால் நாட்டினுள் போக்குவரத்து தடைகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் காசோலைகளை கையொப்பமிடுவதற்கு சேவைக்கு வருகை தர முடியாதிருந்தமையால் இந்த கொடுப்பனவுகள் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக உரிய தகவல்கள் பெறுகைகள் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. | |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 36 மற்றும் உள்ளபடியான பதவியணி 22 ஆக காணப்பட்டதுடன் 08 பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நிலையத்தின் பணிப்பொறுப்புக்கு பொருந்தும் வகையில் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பணிப்பொறுப்புக்கு பொருந்தாத வகையில் சமையற்காரர் பதவிகள் 02 காணப்பட்டன. ஒப்பந்த அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நிறுவனத்தில் தற்போது உள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் திருத்தியமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது.<br><br>முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 02 இற்காக இணைத்துக் கொள்ளப்படும் இரு ஊழியர்கள் தற்போது நிரந்தர பதவியணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் சாரதி சேவையில் ஆட்சேர்க்கப்படும் இரு ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் நிரந்தரமாக்குவதற்கு உரிய வயது எல்லைகளை விஞ்சியிருந்தமையால் நிரந்தரமாக்குவதற்கு முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு மற்றும் திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்று ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |